BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# AMO 2022 வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் மாநாட்டில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வாதிட இருக்கும் விஷயங்கள்:

## போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் வளமை

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 12, 2022) –ஆகஸ்ட் 14 முதல் 17 வரையிலான நாட்களில், நகராட்சிகளின் சங்கம் (AMO) நடத்தவிருக்கும் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் மாநாட்டில் ப்ராம்ப்ட்டன் நகரில் இருந்து ஒரு தூதுக்குழு பங்கேற்கவிருக்கிறது. மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்கள் தலைமையிலான நகர சபை அங்கத்தினர்கள், மற்றும் நகர அலுவலர்கள் ஆகியோர், ப்ராம்ப்ட்டன் நகரத்தின் முக்கிய பிரச்சனைகள் பற்றி வாதிடுவதில், அரசாங்க அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் மாகாணம் முழுவதிலுமாக வளர்ச்சியில் பங்குபெறும் முக்கிய நபர்கள் ஆகியோருடன் பரஸ்பரம் ஈடுபடுவார்கள்.

நகரமானது கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து மீண்டெழுந்து, முன்னேறுவதில் மற்றும் வலுவான ப்ராம்ப்ட்டனை இன்னும் சிறப்பாக கட்டமைப்பதில் கவனம் செலுத்துகையில், சுகாதாரமான, செழித்துவளருவதுமான சமுதாயத்தை உறுதிப்படுத்துவதற்கான முன்னுரிமை கொண்ட விஷயங்கள் இக்கு எடுத்துரைக்கப்படும். இதில் அடங்குபவை:

- **இன்னும் சிறந்த போக்குவரத்து வசதியைக் கட்டமைத்தல் –** ஏற்கெனவே இருக்கின்ற சேவைகளைப் பேணிவருதல், யுக்திரீதியான உள்கட்டமைப்பு திட்டப்பணிகளில் முதலீடு செய்தல் மற்றும் அதிக அளவிலான பேருந்துபோக்குவரத்தினை விரிவாக்கம் செய்தல்.
- **சுகாதாரப் பராமரிப்பினை மேம்படுத்துதல் –** சமுதாயத்திற்கான தற்போதைய மற்றும் வளர்ந்துவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர சுகாதாரப்பரமரிப்பில் உள்ள இடைவெளியை நிரப்ப உடனடி நிதிவசதி பெறுதல்.
- **பொருளாதாரத்திற்கு வலுச் சேர்த்தல் –** நகரின் புதுமை படைத்தல் மற்றும் தொழில்நுட்ப உருமாற்ற முயற்சிகளுக்கு ஆதரவளித்தல், உயர் திறன் கொண்ட முதலீடுகளை ஈர்த்தல், உள்கட்டுமான திட்டப்பணிகளை விரைவாக்குதல் மற்றும் அனைவரையும் உள்சேர்க்கும் தன்மை கொள்ளுதல்.
- **காலநிலைக்கு ஏற்ற செயல்பாடுகள் மற்றும் நிலைக்க வைக்கும் தன்மையை செயல்வடிவில் எடுத்துக்காட்டுதல் –** பேருந்துப் போக்குவரத்து மற்றும் செயல்பாடுமிக்க போக்குவரத்தினை முன்னெடுப்பது, க்ரீன்ஹவுஸ் வாயு உமிழ்வுகளைக் குறைப்பது, சக்தி திறத்தன்மை மீது கவனம் குவிப்பது மற்றும் இயற்கைவளம் வாய்ந்த இடங்களுக்கு புத்துயிரூட்டுவது மற்றும் நகர்ப்புறத்தில்

மரங்களால் அடர்ந்த கூடாரம் அமைப்பது ஆகியவை உள்ளிட்ட காலநிலை செயல்பாட்டுக்கான முன்னுரிமை கொண்ட விஷயங்களை முன்கூட்டியே முடித்தல்.

- **வீட்டு வசதிக்கான மேலும் அதிக தெரிவுகளை ஏற்படுத்திக் கொடுத்தல் –**அனைத்து வசதிகளும் அடங்கிய வகையில், குடியிருப்புவாசிகள் தங்களுக்கு கட்டுப்படியாகும் செலவில் வீட்டுவசதியை கண்டறியும் வகையில்  மேம்படுத்தலுக்கு தீர்வுகாணுதல்; இது வீடுகளைத் தெரிவு செய்தல் மற்றும் ஊக்கம் அளிக்கும் வகையில் வீடுகளை அளிப்பதற்கான சரியான வீட்டு வசதியை வினியோகிப்பதன் மூலம் செய்யப்படுதல்.

நகரின் முன்னுரிமை கொண்ட விஷயங்களைப் பற்றி மேலும் அறிய  இங்கு க்ளிக் செய்யவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நகரமானது கனடாவின் 25 பெரிய நகரங்களில் வேகமாக வளர்ந்து வருகிற ஒரு நகரமாகும்; மேலும் COVID-19 தொற்றுநோய் பரவலின் தாக்கத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை நாம் தொடர்ந்து செயல்படுத்தி வருவதால், ஒரு செழிப்பான மற்றும் வளமான சமூகமாக இருப்பதை உறுதி செய்வதற்காக அரசாங்கத்தின் மற்ற மட்டங்களுடன் வலுவான மற்றும் பயனுள்ள கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கு நாம் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். இந்த மாகாணசபையின் ஆயுட்காலம் முழுவதும் மாகாண நிர்வாகம் நமக்குக் காட்டிய ஆதரவிற்கும், நமது நகரத்தை மேம்படுத்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பிற்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ப்ராம்ப்ட்டன் நகரில் பொதிந்திருக்கும் மகத்தான திறனை உணர்ந்து கொள்வதற்காக அவர்களுடனும் அனைத்து கூட்டாளர்களுடனும் தொடர்ந்து பணியாற்றுவதை நான் எதிர்நோக்குகிறேன்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகர ஊழியர்கள், கவுன்சில் ஆயுட்கால முன்னுரிமை கொண்ட விஷயங்களுக்கு ஆதரவளிக்க உறுதிபூண்டுள்ளனர்: ப்ராம்ப்ட்டன் நகரமானது, வாதாடி அடைவதற்கான வாய்ப்புகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், நமது குடியிருப்பாளர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு நமது அரசாங்க கூட்டாளர்களுடன் ஒத்துழைப்பதன் மூலமும் நன்கு இயங்கும் நகரமாகும். ஒன்ட்டாரியோ மாகாணத்துடன் இணைந்து நாம் தொடர்ந்து செய்து வரும் பணியானது, நமது நகரத்தின் எதிர்காலத்திற்காக அச்சாணி போன்ற பங்கு வகிக்கிறது. மாநாட்டின் போது எங்கள் சகாக்களுடன் பரஸ்பர ஈடுபாடு கொள்ளவும், நமது சமூகத்திற்கான முக்கிய முன்னுரிமைகள் பற்றி விவாதிப்பதையும் நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

*- பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca